எம்.சி.ஓ.பி. எண்: 533/2014 தேதி : 28.8.2024

ம.சா. : 1
பெயர் : J. விஜயகுமாா்
த /பெ. : ஜெகநாதன் V.
வயது : 37

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். மேலும், என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 10 வரை தாக்கல் செய்கிறேன். மசாஆ 8,9 ஆவணங்கள் எதிா்மனுதாரா் தரப்பு ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடுட செய்யப்படுகிறது. மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தை நான்தான் ஓட்டிச்சென்றேன் என்றால் சாி. எதிரே வந்த மகேந்திரா வேன் மோதி விபத்து நடந்தது என்றால் சாி. அந்த சாலையில் நடுவே தடுப்பு சுவா் கிடையாது. நான் நிதனமாக வாகனத்தை ஓட்டிச்சென்றிருந்தால் இந்த விபத்தை தடுத்திருக்கலாம் என்றால் சாியல்ல. மகேந்திரா வேன் ஓட்டி நிதானமாக ஒட்டிவந்தாா் என்றாலும் நான்தான் வேகமாக சென்று இந்த விபத்துக்கு காரணம் என்றால் சாியல்ல. எனது ஓட்டுநா் உாிமம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய வாகனத்தை பதிவு சான்று, காப்பீடு, மோட்டாா் வாகன ஆய்வாளா் அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சாிதான். விபத்து குறித்த மாதிரி வரைபடம், குற்றப்பத்திரிக்கை மற்றும் மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவைகளை தாக்கல் செய்தால் இந்த விபத்து என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளது என்று தெரியவரும் என்பதால் அவைகளை தாக்கல் செய்யாமல் தவிர்த்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. எனக்கு இந்த விபத்தில் ஏற்பட்ட காயங்கள் சொற்ப காயங்கள் என்றாலும் அவை குணமாகி விட்டது என்றால் சாியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் அனைத்தும் காப்பீடு மூலம் திரும்ப பெற்றுவிட்டேன் என்றால் சாியல்ல. நான் தொழில்் வருமானம் குறித்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சாியல்ல. இந்த விபத்துக்கு நான்தான் காரணம் என்பதால் மனு தள்ளுபடி ஆக வேண்டுமென்றால் சாியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. என்னுடைய அஜாக்கிரதையால் விபத்து நடந்தபடியால் 2 ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

**x**

**சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.**